இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 171 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 18 – ஞாயிற்றுக்கிழமை 01 பிப்ரவரி 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 171: Thiruvalluvar Year - 2057 - Thai 18 - Sunday 01 February 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


## நாட்டுக்கே வழிகாட்டும் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் அடைந்துள்ள

# தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஊடகங்கள் மக்களுக்குச் சொல்ல வேண்டும்!

## என்.டி.டி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் தமிழ்நாடு உச்சி மாநாட்டில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, பிப்.1-**

**“நாட்டுக்கே வழிகாட்டும் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் அடைந்துள்ள தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஊடகங்கள் மக்களுக்குச் சொல்ல வேண்டும்” என்று என்.டி.டி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் தமிழ்நாடு உச்சி மாநாட்டில் உரையாற்றியபோது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.1.2026) சென்னையில் நடைபெற்ற என்.டி.டி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் தமிழ்நாடு உச்சி மாநாட்டில் (TAMIL NADU SUMMIT) கலந்துகொண்டு, ஆற்றிய உரை வருமாறு:-**

தமிழ்நாடும் – தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளும் தேர்தல் களத்திற்கு மும்முரமாக தயாராகிக் கொண்டிருக்கக்கூடிய நிலையில், “தமிழ்நாடு சம்மிட்” என்ற இந்தச் சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கக்கூடிய NDTV ஊடகத்திற்கு முதலில் என்னுடைய நன்றியை, வணக்கத்தை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஆங்கில ஊடகங்கள் அறிவீர்கள்!

இந்திய அரசியலில், நிறைய மாடல்கள் இருக்கின்றன. அதில் ‘யூனிக் மாடல்’, திராவிட மாடல்! இந்தியா முழுவதும் பார்க்கப்படும் ஆங்கில ஊடகமான நீங்கள், செய்திகளை சேகரிக்க நாடு முழுவதும் பயணம் செய்திருப்பீர்கள். உங்களால் தமிழ்நாட்டிற்கும், இந்தியாவின் பிற பகுதிகளுக்கும் இருக்கும் வேறுபாட்டை நிச்சயம் நீங்கள் உணர்ந்திருக்க முடியும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும், அனைத்து மாவட்டங்களும், இரண்டாம் நிலை – மூன்றாம் நிலை நகரங்களும், ஊரகப் பகுதிகளும்கூட வளர்ச்சி அடைந்திருக்கிறது. சிறப்பான உட்கட்டமைப்பு வசதிகளும், போக்குவரத்து வசதியும் இருக்கின்ற மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. இந்த மாநிலத்திற்கு என்று பரந்துபட்ட அரசியல் பார்வை இருக்கிறது. இங்கு சமூகநீதியையும், சமத்துவத்தையும், சமூக நல்லிணக்கத்தையும், மக்கள் நலனையும் முக்கியமாக நினைக்கிறோம்.

இவை எல்லாவற்றையும் சரியாக கொண்டு சென்று, திறமையான அரசை நடத்துவதால்தான், இந்தியாவிலேயே யாரும் அடைய முடியாத 11.19 சதவிகித பொருளாதார வளர்ச்சியை, திராவிட மாடல் ஆட்சியில் சாத்தியப்படுத்தியிருக்கிறோம். இந்த வளர்ச்சியை நாங்கள் சாதாரணமாக அடைந்துவிடவில்லை. சமூகத்தில் எந்தவொரு பிரிவும் விடுபட்டு விடக் கூடாது என்று, மிகவும் கவனமாக பார்த்துப் பார்த்து திட்டங்களை உருவாக்கியிருக்கிறோம்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து ஏற்படுத்தும் நெருக்கடிகள்!

ஒருபக்கம், ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து ஏற்படுத்தி வரும் அரசியல் நெருக்கடிகள் எல்லாவற்றையும் எதிர்கொண்டு, மறுபக்கம் தொலைநோக்குப் பார்வையுடன் எதிர்காலத்திற்கான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். தேவைகளுக்கு ஏற்ப, எங்களின் கொள்கைகளும் “Evolve” ஆகி வருகிறது.

மகளிர், குழந்தைகள், மாணவர்கள், இளைஞர்கள், தொழில்முனைவோர், உழவர்கள், நெசவாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் என்று அனைத்துத் தரப்பினருக்கும் நன்மைகளை செய்து கொண்டிருக்கிறோம்.








முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.1.2026) சென்னையில் நடைபெற்ற NDTV தொலைக்காட்சி நிறுவனத்தின் தமிழ்நாடு உச்சி மாநாட்டில் (TAMIL NADU SUMMIT) கலந்துகொண்டு உரையாற்றினார். இம்மாநாட்டில், அமைச்சர்கள் பி.கே.சேகர் பாபு, டி.ஆர்.பி. ராஜா, NDTV நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் ராகுல் கன்வால், Chief Experience அலுவலர் ராகுல் ஷா, செயல் இயக்குநர் வீரராகவ், நிருவாக ஆசிரியர் சிவ் அரூர், அரசியல் பிரிவின் ஆசிரியர் வசுதா வேணுகோபால், முதன்மை செய்தியாளர் சாம் டேனியல், பொருளாதார வல்லுநர் சுர்ஜித், பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்த பிரமுகர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வாட்ஸ் அப் யுனிவர்சிட்டியில் பொய்களைப் பரப்புகிறார்கள்!

**இந்த ‘க்ரோத் ஹிஸ்டரி’யை தாங்கிக்கொள்ள முடியாதவர்கள், வாட்ஸ்அப் யுனிவர்சிட்டியில் பொய்களை எல்லாம் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். எங்களைப் பற்றி அவர்கள் சொல்லும் குற்றச்சாட்டுகள் எல்லாமே பழைய ‘ஸ்கிரிப்ட்’தான்!**

இந்த ஐந்தாண்டுகளாக நாங்கள் செய்துகொண்டு இருக்கும் திட்டங்களை ஹைலைட்டாக நான் சொல்ல விரும்புகிறேன்.

2021 தேர்தல் அறிக்கையில், மகளிருக்கு ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை தருவோம் என்று சொன்னோம். உடனடியாக எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்தார்கள். அதெல்லாம் தரவே முடியாது; தமிழ்நாட்டின் நிதிநிலைமை சரியில்லை என்று சொல்லி பரப்புரை எல்லாம் செய்தார்கள்;

### மகளிருக்கு மாதம் தோறும் ரூ.1000 வழங்கி சொன்னதை செய்துள்ளோம்!

அதேசமயம், பெண்களுக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் தருவோம் என்று தங்களுடைய தேர்தல் அறிக்கையில் சொல்லவும் செய்தார்கள். ஆனால், மக்கள் அவர்களின் வாக்குறுதியை நம்பவில்லை. தி.மு.க. சொன்னால், சொன்னதை செய்யும் என்று நம்பிக்கையுடன் வாக்களித்தார்கள். அந்த நம்பிக்கையை காப்பாற்றி, இப்போது ஒரு கோடியே 30 இலட்சத்து 69 ஆயிரத்து 831 மகளிருக்கு, மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் என்று, இதுவரைக்கும் 33 ஆயிரத்து 464 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறோம்.

அதேபோல், மகளிருக்கு பேருந்துகளில் கட்டணமில்லா பயணம் என்று சொன்னோம். சொன்னது போலவே, திமுக வெற்றிபெற்ற மறுநாளே, விடியல் பயணம் திட்டத்தில், பெண்கள் கட்டணமில்லாமல் பயணிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இதுவரைக்கும், 13 ஆயிரத்து 387 கோடி ரூபாய் மதிப்பிலான 835 கோடிக்கும் அதிகமான பயணங்களை செய்திருக்கிறார்கள்.

இன்னும் சொல்ல வேண்டும் என்றால், இந்த திட்டத்தால் விளிம்பு நிலை மக்களுக்கு எவ்வளவு பயன் ஏற்படுகிறது என்று தரவுகளோடு உணர்ந்து, திருநர்களுக்கும், மலைப்பகுதிகளில் இருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கும் இந்தத் திட்டத்தை விரிவாக்கம் செய்தோம்.

### நாட்டிற்கே வழிகாட்டும் ‘திராவிட மாடல்’ அரசு!

நாங்கள் கொண்டு வந்த இந்த இரண்டு திட்டத்தையும், இப்போது பல்வேறு மாநிலங்களும் வழங்கத் தொடங்கியிருக்கிறார்கள், இதுதான் திராவிட மாடல், நாட்டிற்கே வழிகாட்டி என்பதற்கான அடையாளம்! அதேபோல், இன்னொரு திட்டம்! இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டம்! நாள்தோறும் 19 இலட்சத்து 34 ஆயிரத்து 69 குழந்தைகள், சூடாகவும், சுவையாகவும், சத்தான உணவை சாப்பிட்டு வகுப்பறைக்குள்ளே அடியெடுத்து வைக்கிறார்கள்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தித் துறை –

# வேலைவாய்ப்பில் தமிழ்நாடு முதலிடம்!

## ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வறிக்கை பாராட்டு!

*புதுடெல்லி, பிப்.1-*

*நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் 7.4 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. நாட்டின் உற்பத்தி துறையில் தமிழ்நாடு, கர்நாடகா, தெலுங்கானா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்கள் 40 சதவீதம் பங்கு வகிப்பதாக பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*நாட்டின் ஒட்டு மொத்த உற்பத்தித் துறை வேலைவாய்ப்பில் சுமார் 15 சதவிகிதம் பங்களிப்புடன், தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளதாகவும் இந்த அறிக்கை பாராட்டு தெரிவித்துள்ளது. உற்பத்தித் துறை வேலைவாய்ப்பில் குஜராத் 13 மற்றும் மகாராஷ்டிரா 13 சதவீதமாகவும், உத்தரப்பிரதேசம் 8 சதவீதம், கர்நாடகா 6 சதவீதமாகவும் உள்ளன. அதிநவீன தொழில்நுட்பம், ஐடி, நிதி போன்ற துறைகளின் வளர்ச்சி தென்மாநிலங்களில் அதிகளவில் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.*

*புதிதாக தொழில் தொடங்குவதை ஊக்குவிக்கும் நடவடிக்கையை தமிழ்நாடு மேம்படுத்தியுள்ளதாகவும், தொழில் ஊக்குவிப்பை ஒற்றை சாளர அனுமதி, ஆன்லைன் அனுமதி, நில சீர்திருத்தம் உள்ளிட்ட மாநில அரசின் நடவடிக்கைகள் இதனை சாத்தியப்படுத்தி உள்ளதாகவும் ஒன்றிய அரசின் ஆய்வறிக்கை பாராட்டி உள்ளது. சூரியமின் உற்பத்தி பூங்கா, மாவட்ட அளவிலான கார்பன் குறைப்பு திட்டங்களில் சிறப்பான நடவடிக்கையை தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளதாகவும், மின்நுகர்வு குறைப்பு திட்டங்களிலும் தொழில் ஊக்குவிப்பு நடவடிக்கை சிறப்பாக உள்ளதாகவும், பொருளாதார ஆய்வறிக்கை பாராட்டு தெரிவித்துள்ளது. ஆலைத் தொழிலாளர்களில் 60 சதவீதம் பேர் தமிழ்நாடு, கர்நாடகா, மகாராஷ்டிரா உட்பட 7 மாநிலங்களில் உள்ளதாகவும், நாட்டில் பெரும் தொழிற்சாலைகள் அதிகம் உள்ள முதல் 8 மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்றும் பொருளாதார ஆய்வறிக்கை சுட்டிக் காட்டி உள்ளது.*

*பெண்கள் வேலை வாய்ப்பை பெருக்கும் திட்டங்களை தீட்டுவதில், வட மாநிலங்களுக்கு தமிழ்நாடு முன்னோடியாக உள்ளதாகவும், பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கி வேலைவாய்ப்பை பெருக்க தமிழ்நாட்டின் தோழி விடுதி சிறந்த உதாரணம் எனறும் பெண்கள் வேலைவாய்ப்பை பெருக்க நினைக்கும் மாநிலங்களுக்கு தோழி விடுதி திட்டம் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு என்றும் ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வறிக்கை பாராட்டி உள்ளது.*

*தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய முதலீடுகள் வேறு மாநிலங்களுக்குச் செல்வதாக பா.ஜ.க.வினர் கூறி வரும் நிலையில், தொழில்வளர்ச்சி, வேலை வாய்ப்பு, பெண்களின் பாதுகாப்பு உள்ளிட்டவற்றில் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுவரும் திட்டங்களை ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வறிக்கை பாராட்டு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.*

## பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில்

# “ஜல் ஜீவன் மிஷன்” திட்டத்தில் மிகப்பெரிய அளவில் முறைகேடுகள்!

*புதுடெல்லி, பிப்.1-*

*பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில், ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தில் மிகப் பெரிய அளவில், முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக புகார்கள் எழுந்துள்ளன.*

*ஒன்றிய அரசால், கடந்த 2019ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஜல் ஜீவன் மிஷன் திட்டம் மூலம் 2024ஆம் ஆண்டுக்குள் நாட்டின் அனைத்து கிராமப்புற வீடுகளுக்கும் குழாய் மூலம் பாதுகாப்பான மற்றும் போதுமான குடிநீர் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. இந்த திட்டத்திற்காக கடந்த பட்ஜெட்டில், 67 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.*

*இந்நிலையில், ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தில் மிகப்பெரிய அளவில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக புகார்கள் எழுந்துள்ளன.*

*குறிப்பாக பா.ஜ.க. ஆளும் உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான், குஜராத், மத்தியப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் பணி முடிந்துவிட்டதாகக் கூறி, போலி ரசீதுகள் மூலம், பணம் பெறப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.*

*இந்த விவகாரத்தில், 621 துறைசார் அதிகாரிகள், 969 ஒப்பந்ததாரர்கள் உள்பட 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜல் ஜீவன் மிஷன் திட்ட முறைகேடு தொடர்பாக, 84 சதவீத புகாருடன் உத்தரப்பிரதேசம் முதலிடத்தில் உள்ளது. இந்த விவகாரத்தில், 7 மாநிலங்களுக்கு சுமார் 129 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அதிகபட்சமாக குஜராத் மாநிலத்திற்கு மட்டும் சுமார் 120 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.*